**11.06.2025** **அசல் வழக்கு எண்.37/2014** **Starting Time : 12.45 p.m.**

**பி.வா.சா.1 திரு.முருகன்செட்டி த/பெ.சுப்பிரமணி செட்டி**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துக்கள் வெளியம்பாக்கம் கிராமத்தில் சர்வே எண்.58/1எ-ல் உள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் 90 சென்ட் என்றால் சரிதான். அதில் 12 சென்ட்டிற்கு வாதிகள் தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதிகளுக்கு அதில் சொத்து ஏதும் இல்லை. மேற்படி 90 சென்ட் ஆதியில் யாருக்கு பாத்யப்பட்ட சொத்து என்றால் முனிக்கான் செட்டி என்பவருக்கு பாத்யப்பட்டிருந்தது. அவருக்கு இந்த சொத்துகள் எவ்வாறு வந்தது என்றால் வரத செட்டி முனிக்கான் செட்டிக்கு உயில் எழுதி வைத்ததின் அடிப்படையில் வந்தது. குப்பு செட்டியிடமிருந்து முனிக்கான் செட்டி கிரயமாக பெற்ற சொத்துக்கள் தான் மேற்படி 90 சென்ட் சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களில் 1960ல் இருந்து தான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் 1ஆம் வாதியின் தகப்பனார் பெயர் குப்புசாமி என்றால் சரிதான். வாதிகள் வழக்கில் தாக்கல் செய்துள்ள 1954ஆம் ஆண்டு கிரய ஆவணம் (வா.த.சா.ஆ.1)-ஐ நான் பார்த்தேனா இல்லையா என்றால் நான் பார்க்கவில்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா பிராது மற்றும் சாட்சியத்தில் மேற்படி ஆவணத்தின் மூலம் தாவா சொத்துக்களில் 9 சென்ட்டை 1ம் வாதியின் தகப்பனார் கிரயம் பெற்றுள்ளதாக கூறியுள்ளதை பற்றி நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக் கொண்டேன். தாவா சொத்தில் இதே சர்வே எண்ணில் 3 சென்ட்டிற்கு ரசீது (வா.த.சா.ஆ.2) 1ம் வாதியின் தகப்பனார் பெயருக்கு எழுதிக் கொடுத்ததாக 1ம் வாதி அவருடைய சாட்சியத்தில் கூறியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளின் மூத்த சகோதரர் கிருஷ்ண கவுண்டர் தெரியுமா என்றால் தெரியும். 1ம் வாதியும் அவருடைய சகோதரரும் அவர்களது குடும்பத்திற்கு பாக ஆவணம் (வா.த.சா.ஆ.3) செய்துக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து சர்வே எண்ணில் 1ஆம் வாதிக்கு 4 சென்ட்டும், அவருடைய சகோதரர் கிருஷ்ண கவுண்டருக்கு 8 சென்ட்டும் பிரித்து எழுதியுள்ள விவரங்களை நான் தெரிந்துக் கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். ஆனால் அது தவறு. 1ம் வாதியின் சகோதரர் அவருக்கு கிடைத்த 8 சென்ட் நிலத்தை 1ம் வாதியின் பெயருக்கே கிரயம் செய்துக்கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர்களது சொத்தை பொறுத்து தான் பிரித்துக்கொண்டார்கள். சர்வே எண். 58/1எ-ல் இல்லை. அதனால் வழக்கு சொத்துக்களில் 12 சென்ட் சொத்துக்கள்

வா.த.சா.ஆ.1 கிரய ஆவணம் வா.த.சா.ஆ.2 ரசீது, வா.த.சா.ஆ.3 பாக ஆவணம், வா.த.சா.ஆ.4 கிரய ஆவணத்தின் மூலம் 1ம் வாதிக்கு பாத்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 எனது மைனர் மகன் 2ஆம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்களின் ஆவணம் என்றால் சரிதான். அதில் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெற்றேன் என்றால் 78 1/2 செண்ட் ஆகும். நான் கிரயம் பெற்ற 78 1/2 செண்ட்டுக்கு கிழக்கு பக்கத்தில் 1ம் வாதியின் இடம் உள்ளது என்றால் இல்லை. சர்வே எண்.58/1எ-ல் 90 செண்ட் எனது அனுபவத்தில் தான் உள்ளது. நான் கிரயம் பெற்ற பி.வா.சா.ஆ.4ன்படி 78 1/2 செண்ட் போக மீதம் உள்ள 11 1/2-க்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 11 1/2 செண்ட் டி.சி.லேண்ட்-ஐ நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணம் எனது பெயரில் உள்ளதா என்றால் வரத செட்டி பெயரில் தான் உள்ளது. அவர் 11 1/2 செண்ட்டை நிறுத்திக் கொண்டுள்ளார். 1ம் வாதியின் சொத்துக்கு மேற்கு பக்கத்தில் தான் கிரயம் பெற்ற 78 1/2 செண்ட் சொத்துக்கள் உள்ளது என்றால் எனது சொத்துக்கு நான்கு பக்கமும் 1ம் வாதியின் சொத்துக்கள் இல்லை. நான் கிரயம் பெற்ற சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் 1ம் வாதியின் சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் தவறு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4-ல் சொத்து விவரத்தில் முத்தியாலு கவுண்டர் நஞ்சைக்கு (மேற்கு) என்று கூறியிருந்தால் ( சாட்சிக்கு ஆவணத்தில் உள்ள மேற்படி வரி படித்து காண்பிக்கப்பட்டது) சரிதான்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Ending time : 01.20 p.m.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.